// மின்னஞ்சல் மூலமாக //

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி)
செயல்முறைகள், சென்னை 06

**ந.க.எண். 014965/அ3/இ1/2025 நாள். 03.10.2025**

....

பொருள் : பள்ளிக்கல்வி – தமிழ்நாடு பொதுப்பணி / அமைச்சுப்பணி – இணை இயக்குநர் / மாவட்டக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர்கள், கண்காணிப்பாளர்கள் மற்றும் பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர்கள் மற்றும் உதவியாளர்கள் – விருப்ப மாறுதல் / மனமொத்த மாறுதல் (Service completed one year in Present Post / Present Station) மற்றும் பதவி உயர்வு வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை எண். 149 பள்ளிக் கல்வி (ஆர்2) துறை, நாள்.01.07.2024.
2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண். 014965/அ3/இ1/2025 நாள். 02.04.2025, 09.04.2025 மற்றும் 08.05.2025
3. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண். 014964/அ3/இ1/2025 நாள். 05.05.2025
4. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண். 026219/அ3/இ1/2025 நாள். 02.06.2025
5. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண். 026220/அ3/இ1/2025 நாள். 16.05.2025 மற்றும் 22.05.2025
6. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.056352/அ1/இ1/2025 நாள். 23.09.2025

........

முறையான கண்காணிப்பாளர் பதவியிலிருந்து மாவட்டக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் பதவியினை பதவி உயர்வு மூலமாக நிரப்பிட 15.03.2025 நிலவரப்படி தயாரிக்கப்பட்ட தேர்ந்தோர் முன்னுரிமைப் பெயர் பட்டியல் (73 நபர்களைக் கொண்டது) பார்வை (2) இல் 02.04.2025 நாளிட்ட செயல்முறைகளின்படி வெளியிடப்பட்டு, அதனடிப்படையில் வரிசை எண் 01 முதல் 10 வரைவுள்ள (17 (b) ஒழுங்கு நடவடிக்கை நிலுவை உள்ளவர்கள், தற்காலிக உரிமைவிடல் செய்தவர்கள் நீங்கலாக) கண்காணிப்பாளர்களுக்கு மாவட்டக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர்களாக பதவி உயர்வு வழங்கி பார்வை (2) இல் 09.04.2025 மற்றும் 08.05.2025 ஆகிய தேதிகளில் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

2. பார்வை (6) இல் காணும் செயல்முறைகளின்படி, நேர்முக உதவியாளர் பதவியிலிருந்து நிதிக்காப்பாளர்களாகப் பதவி உயர்வு வழங்கப்பட்டதாலும், வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்றதாலும் மாவட்டக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் பணியிடங்கள் காலி ஏற்பட்டுள்ளது. மேலும், முறையான கண்காணிப்பாளர், பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் மற்றும் உதவியாளர் பணியிடங்களும் காலியாக உள்ளது.

3. பள்ளிக் கல்வி இயக்ககம், பள்ளிக் கல்வித் துறையின் கீழ்வரும் பிற இயக்ககங்கள் மற்றும் கல்வி மாவட்ட அளவில் நீதிமன்ற வழக்குகள், ஆசிரியர்கள் / அலுவலகப் பணியாளர்களின் பணியமைப்பு, ஆசிரியர் நியமனங்கள், நிதியுதவி பள்ளி ஆசிரியர்களுக்கான நியமன ஒப்புதல், பணியாளர் நிர்ணயம், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் / அலுவலகப் பணியாளர்களின் பணிக்கால பலன்கள், ஒழுங்கு நடவடிக்கை கோப்புகள், தனியார் பள்ளிகளின் துவக்க அங்கீகாரம், தொடர் அங்கீகாரம், அரசின் நலத்திட்ட உதவிகள், அரசுத் தேர்வுத் துறையால் நடத்தப்படும் தேர்வுகள் உள்ளிட்ட அனைத்து கோப்புகளிலும் அரசாணைகள் மற்றும் விதிமுறைகளின்படி மாவட்டக் கல்வி அலுவலருக்கு சரியான குறிப்புரை வழங்கி நிருவாக பணிகளை திறம்பட மேற்கொள்ள ஏதுவாக நிருவாக பொறுப்பில் உள்ள நேர்முக உதவியாளர்கள் நிரப்பவேண்டிய கட்டாயம் உள்ளது. இதனைப்போன்று நிருவாக பணிகளை திறம்பட மேற்கொள்ள கண்காணிப்பாளர்கள், பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர்கள் மற்றும் உதவியாளர் பணியிடங்களும் நிரப்பவேண்டிய கட்டாயம் உள்ளது.

4. ஆகையால், 15.03.2025 நிலவரப்படி நேர்முக உதவியாளர், கண்காணிப்பாளர் மற்றும் பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் பதவிக்கு பார்வை (2) முதல் (4) வரையில் காணும் செயல்முறைகளின்படி வெளியிடப்பட்ட தேர்ந்தோர் பட்டியல்கள் அடிப்படையில் ஏற்கனவே பதவி உயர்வு, பணி மாறுதல் வழங்கப்பட்ட நபர்களை தவிர்த்து அதன் பின்

முதுநிலையில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு / பதவி மாறுதல் வழங்கப்படவேண்டியுள்ளது.

5. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட 168 பணிநாடுநர்களுக்கு நேரடி நியமனம் மூலம் பணிநியமன ஆணை வழங்கப்படவேண்டியுள்ளதால் ஏற்கனவே பணிபுரியும் உதவியாளர்கள் தங்களுக்கு மாறுதல் வழங்கக்கோரி விண்ணப்பங்கள் பள்ளிக் கல்வி இயக்ககம் பெறப்பட்டுள்ளது..

6. தேர்ந்தோர் பட்டியலில் அடுத்த முதுநிலையில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு வழங்கும் முன்னர் ஏற்கனவே நேர்முக உதவியாளர்களாக, கண்காணிப்பாளர்களாக, பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர்களாக பணியாற்றிவரும் நபர்கள் குடும்ப சூழ்நிலை, நெடுந்தூர பயணம், கணவன் / மனைவி பணிபுரிதல், உடல்நலக்குறைபாடு, வயதுமுதிர்ந்த பெற்றோர்களை கவனித்தல் போன்ற பல்வேறு காரணங்களால் தங்களுக்கு விருப்ப மாறுதல் வழங்கக் கோரி விண்ணப்பங்கள் பள்ளிக் கல்வி இயக்ககம் பெறப்பட்டுள்ளது.

7. எனவே, விருப்ப மாறுதல் / மனமொத்த மாறுதல் கோரும் நேர்முக உதவியாளர்கள், கண்காணிப்பாளர்கள், மற்றும் பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர்கள் தங்களது மாறுதல் கோரும் விண்ணப்பங்கள் **(ஏற்கனவே பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு மாறுதல் விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட்டவர்கள் தவிர்த்து)** உரிய படிவத்தில் முதன்மைக் கல்வி அலுவலரின் பரிந்துரையுடன் (மாறுதல் கோரும் காரணத்திற்கான ஆதாரம், முன்னுரிமை ஏதுமிருப்பின் அதற்கான ஆவணம் உட்பட Issued by competent authority) **முழு வடிவில் 03.10.2025 மாலை 07.00 மணிக்குள்** a3sec.tndse@gmail.com மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிட கேட்டுக்கொள்ளப்படுகிறது. **மேலும், உதவியாளர் பதவிக்கு மாறுதல் கோரும் விண்ணப்பங்களை 04.10.2025 மாலை 03.00 மணிக்குள்** cosea4sec@gmail.com மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிட கேட்டுக்கொள்ளப்படுகிறது மேற்காண் பதவிகளில் மாறுதல் கோரி **விண்ணப்பம் பெறப்படவில்லையெனில் பதவி வாரியாக இன்மை அறிக்கையினை சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் தவறாது மேற்குறித்த தேதி / நேரத்திற்குள் அனுப்புதல் வேண்டும்.** மாறுதல் விண்ணப்பங்கள் பெறப்படவில்லையெனில் அம்மாவட்டத்தில் மாறுதல் கோரும் நபர்கள் எவரும் இல்லையென கருதி முதுநிலைப் பட்டியல் இறுதிசெய்யப்படும்.

6. மாறுதல் கோரும் விண்ணப்பங்களை முதன்மைக் கல்வி அலுவலர்கள் பரிந்துரை செய்யும் முன்னர் பார்வை (1) இல் அரசாணையில்

தெரிவிக்கப்பட்டுள்ள நெறிமுறைகள் மற்றும் இதர நெறிமுறைகளின்படியும், பார்வை (5) இல் காண் இவ்வியக்கக செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படியும், தகுதியுடைய விண்ணப்பம்தானா என்பதை உறுதிசெய்துகொண்டு அதன் பின்னர் பரிந்துரை செய்து முகப்புக் கடிதத்துடன் அனுப்புதல் வேண்டும். பரிந்துரையின்றி பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**விருப்ப மாறுதல் / மனமொத்த மாறுதல் கோரும் மாவட்டக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர்கள், கண்காணிப்பாளர்கள், பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர்கள் மற்றும் உதவியாளர்கள் தற்போதைய பதவி, தற்போதைய அலுவலகத்தில் ஓராண்டு பணி முடித்திருக்க வேண்டும்.**

விருப்ப மாறுதல் / மனமொத்த மாறுதலுக்கு விண்ணப்பிக்க ஓராண்டு பணி முடித்திருக்க வேண்டுமென்ற நிபந்தனையிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டியவர்கள்,

I. 40% சதவீத கண்பார்வையற்றவர்கள் மற்றும் 40% சதவீத மாற்றுத்திறனாளிகள்.
II. மனவளர்ச்சி குன்றிய மற்றும் மாற்றுத்திறனாளி குழந்தைகளின் பெற்றோர்.
III. சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்தவர்கள், டையாலிசிஸ் சிகிச்சை மேற்கொள்பவர்கள், இருதய, மூளைகட்டி அறுவை சிகிச்சை செய்தவர்கள், புற்றுநோயாளிகள்.
IV. விதவை (Widow/widower) / ஆதரவற்ற விதவை (Destitute Widow) / கணவனால் கைவிடப்பட்டவர்கள்
V. கணவன் / மனைவி முன்னுரிமை.

ஏற்கனவே மூன்றாண்டு கட்டாய மாறுதலில் வேறு அலுவலகங்கள் சென்றவர்கள் பணியில் சேர்ந்த நாளிலிருந்து மூன்றாண்டுகள் பணிமுடித்த பின்னரே ஏற்கனவே பணியாற்றிய அலுவலகங்கள் மாறுதல் கோருவதற்கான விண்ணப்பங்களை அளிக்க தகுதியுடைவர்.

7. மாறுதல் கோரும் விண்ணப்பங்கள் பார்வை (1) இல் காணும் அரசாணை மற்றும் பார்வை (5) இல் காணும் இவ்வியக்க

செயல்முறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நெறிமுறைகளின்படி இணை இயக்குநரால் (பணியாளர் தொகுதி) பரிசீலிக்கப்பட்டு தகுதியுள்ள மாறுதல் கோரும் **நேர்முக உதவியாளர்களின் மாநில அளவிலான முதுநிலை பெயர் பட்டியல் வெளியிடப்பட்டு, 04.10.2025 அன்று முற்பகல் 10.00 மணியளவில் Google Meet வழியாக கலந்தாய்வு நடத்தப்படும்** எனவும், முறையான கண்காணிப்பாளர் பதவியிலிருந்து நேர்முக உதவியாளர் பதவிக்கான பதவி உயர்வு **(வரிசை எண். 11 முதல் 45 வரை)** (ஒழுங்கு நடவடிக்கை / தண்டனைக் காலம் நிலுவை, ஓய்வு பெற்றவர்கள் நீங்கலாக) 04.10.2025 **அன்று நண்பகல் 12.00 மணியளவில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலங்களில் நடைபெறும்,**

இதேபோல் மாறுதல் கோரும் கண்காணிப்பாளர்களின் **மாநில அளவிலான முதுநிலை பெயர் பட்டியல் வெளியிடப்பட்டு,** 04.10.2025 **அன்று பிற்பகல் 02.00 மணியளவில் Google Meet வழியாக கலந்தாய்வு நடத்தப்படும்** எனவும், பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் பதவியிலிருந்து கண்காணிப்பாளர் பணிமாறுதலுக்கான கலந்தாய்வு **(வரிசை எண். 64 முதல் 116 வரை)** (ஒழுங்கு நடவடிக்கை / தண்டனைக் காலம் நிலுவை, ஓய்வு பெற்றவர்கள் நீங்கலாக) 04.10.2025 **அன்று பிற்பகல் 04.00 மணியளவில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலங்களில் நடைபெறும்,**

இதேபோல் மாறுதல் கோரும் பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர்களின் **மாநில அளவிலான முதுநிலை பெயர் பட்டியல் வெளியிடப்பட்டு, 05.10.2025 அன்று முற்பகல் 10.00 மணியளவில் Google Meet வழியாக கலந்தாய்வு நடத்தப்படும்** எனவும், உதவியாளர் பதவியிலிருந்து பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் பதவி உயர்வுக்கான கலந்தாய்வு **(வரிசை எண். 91 முதல் 155 வரை)** (ஒழுங்கு நடவடிக்கை / தண்டனைக் காலம் நிலுவை, ஓய்வு பெற்றவர்கள் நீங்கலாக) 05.10.2025 **அன்று நண்பகல் 12.00 மணியளவிலும், உதவியாளர்களுக்கான விருப்ப மாறுதல் 05.10.2025 பிற்பகல் 03.00 மணியளவிலும் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலங்களில் நடைபெறும்,** என்பதால் சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கு தகவல் தெரிவித்து கலந்தாய்வில் தவறாது கலந்துகொள்ள தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

7. மாறுதல் குறித்து பார்வை (1) இல் தெரிவிக்கப்பட்டுள்ள நெறிமுறைகள், மேற்குறித்த அறிவுரைகள் ஆகியவற்றின் அடிப்படையில் நேர்முக உதவியாளர்கள், கண்காணிப்பாளர்கள், பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர்கள் மற்றும் உதவியாளர் மாறுதல் கோரும் விண்ணப்பங்களை எவ்வித நினைவூட்டுக்கும் இடமின்றி உரிய இணைப்புகளுடன் பத்தி (5) இல் தெரிவிக்கப்பட்ட தேதி / நேரத்திற்குள்

மேற்கண் மின்னஞ்சல் முகவரிக்கு தெளிவான pdf (Clear pdf) (One person one pdf) கோப்பாக அனுப்புதல் வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

8. மனமொத்த மாறுதல் கோரும் நிகழ்வில் தனியர் ஏற்கனவே இதற்கு முன்னர் பணியாற்றிய அலுவலகத்திற்கு மனமொத்த மாறுதல் கோரும் விண்ணப்பங்களை பரிந்துரை செய்தல் கூடாது.

9.மேலும், முறையே தொடர்ந்து நடத்தப்படவேண்டிய கண்காணிப்பாளர்கள் விருப்ப மாறுதல் மற்றும் பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் பணியிலிருந்து முறையான கண்காணிப்பாளர்களாக பணிமாறுதல், பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் விருப்ப மாறுதல் மற்றும் உதவியாளர் பதவியிலிருந்து பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் பதவி உயர்வு. உதவியாளர் விருப்ப மாறுதல், பதவி உயர்வு கலந்தாய்வுக்கு உரிய (Google Meet Link) மின்னஞ்சல் வாயிலாக அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பிவைக்கப்படும் எனவும் தெரிவிக்கலாகிறது.

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)

3/10/25

3-10-2025

இணைப்பு : Transfer request model form
: Cut Slip -3
: Relinquishment request Letter- 2

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

**நகல் :**

1. மாநில திட்ட இயக்குநர் , ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, சென்னை 6
2. உறுப்பினர் செயலர், ஆசிரியர்தேர்வு வாரியம், சென்னை 6.
3. இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம்,சென்னை 6
4. இயக்குநர், தனியார் பள்ளிகள்இயக்ககம்,சென்னை 6
5. இயக்குநர், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்பயிற்சிநிறுவனம், சென்னை 6
6. இயக்குநர், பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம், சென்னை 6
7. முதன்மை உடற்கல்வி ஆய்வாளர், முதன்மை உடற்கல்வி ஆய்வாளர்அலுவலகம், சென்னை 6
8. இவ்வியக்கக அ2 / அ4 பிரிவிற்கு
9. தகவல் பலகைக்கு

} தங்கள் அலுவலகப் பணியாளர்களுக்கு விவரங்கள் தெரிவிக்கும் பொருட்டும், விண்ணப்பங்கள் (அ) இன்மை அறிக்கை அனுப்பிவைக்கும் பொருட்டும் பணிந்தனுப்படுகிறது

பள்ளிக் கல்வி இயக்ககம்,
சென்னை – 06

மாவட்டக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் – பதவி உயர்வு
(15.03.2025 நிலவரப்படி வெளியிடப்பட்ட தேர்ந்தோர் பட்டியலின்படி)
**ந.க.எண். 014965/அ3/ இ1/2025 நாள். 02.04.2025**

| வ. எண் | தேர்ந்தோர் பெயர் பட்டியல் வரிசை எண் | கண்காணிப்பாளர் பெயர், பணிபுரியும் அலுவலகம் | நேர்முக உதவியாளராக பதவி உயர்வு தெரிவு செய்யும் அலுவலகம் | உரிமைவிடல் எனில் நிரந்தரம் (அ) தற்காலிகம் விவரம் குறிப்பிடவும். |
|---|---|---|---|---|
| | | | | |

முதன்மைக் கல்வி அலுவலரின் கையொப்பம் (தேதியுடன்) / முத்திரை

கண்காணிப்பாளரின் கையொப்பம் (தேதியுடன்)

<u>நேர்முக உதவியாளர் பதவி உயர்வு – உரிமைவிடல்</u>

இடம் :
நாள் :

அனுப்புநர்

பெறுநர்

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)
பள்ளிக் கல்வி இயக்ககம்,
சென்னை – 06

மதிப்புக்குரிய அய்யா,

| | | |
|---|---|---|
| பொருள் | : | தமிழ்நாடு பொதுப் பணி – 15.03.2025 நிலவரப்படி மாவட்டக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் பதவி உயர்வு – உரிமைவிடல் விண்ணப்பம் – சார்ந்து. |
| பார்வை | : | தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண். 014965/அ3/ இ1/2025 நாள். 02.04.2025 |

-----

தமிழ்நாடு பொதுப் பணியின் கீழ்வரும் மாவட்டக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் பணியிடங்களை நிரப்புவதற்காக பார்வையில் காணும் செயல்முறைகளின்படி தேர்ந்தோர் பெயர் பட்டியல் வெளியிடப்பட்டது.

இப்பட்டியலில் எனது வரிசை எண்……………ஆகும், இதன்படி இன்று (            ) Google Meet வழியாக நடத்தப்பட்ட கலந்தாய்வில் எனக்கு வழங்கப்பட்ட நேர்முக உதவியாளர் பதவி உயர்வினை என்னுடைய குடும்ப சூழ்நிலை/ உடல்நிலை காரணமாக தற்காலிக / நிரந்தர உரிமைவிடல் செய்கிறேன். இப்பதவி உயர்வு குறித்து மீளவும் மீள்உரிமை கோரமாட்டேன் எனவும் உறுதியளிக்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

பள்ளிக் கல்வி இயக்ககம்,
சென்னை – 06

முறையான கண்காணிப்பாளர்களாக – பதவி மாறுதல்
(15.03.2025 நிலவரப்படி வெளியிடப்பட்ட தேர்ந்தோர் பட்டியலின்படி)
**ந.க.எண். 014964/அ3/ இ1/2025 நாள். 05.05.2025**

| வ. எண் | தேர்ந்தோர் பெயர் பட்டியல் வரிசை எண் | ப.உ.கண்காணிப்பாளர் பெயர், பணிபுரியும் அலுவலகம் | முறையான கண்காணிப்பாளராக பதவி மாறுதல் தெரிவு செய்யும் அலுவலகம் | |
|---|---|---|---|---|
| | | | | |

முதன்மைக் கல்வி அலுவலரின் கையொப்பம் (தேதியுடன்) / முத்திரை

ப.உ.கண்காணிப்பாளரின் கையொப்பம் (தேதியுடன்)

பள்ளிக் கல்வி இயக்ககம்,

சென்னை – 06

பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர்களாக – பதவி உயர்வு
(15.03.2025 நிலவரப்படி வெளியிடப்பட்ட தேர்ந்தோர் பட்டியலின்படி)

**ந.க.எண். 026219/அ3/ இ1/2025 நாள். 02.06.2025**

| வ. எண் | தேர்ந்தோர் பெயர் பட்டியல் வரிசை எண் | உதவியாளர் பெயர், பணிபுரியும் அலுவலகம் | பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளராக பதவி மாறுதல் தெரிவு செய்யும் அலுவலகம் | உரிமைவிடல் எனில் நிரந்தரம் (அ) தற்காலிகம் விவரம் குறிப்பிடவும். |
|---|---|---|---|---|
| | | | | |

முதன்மைக் கல்வி அலுவலரின்
கைியொப்பம் (தேதியுடன்) / முத்திரை

உதவியாளரின் கையொப்பம்
(தேதியுடன்)

<u>ப.உ.கண்காணிப்பாளர் பதவி உயர்வு – உரிமைவிடல்</u>

இடம் :
நாள் :

அனுப்புநர்

பெறுநர்

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)
பள்ளிக் கல்வி இயக்ககம்,
சென்னை – 06

மதிப்புக்குரிய அய்யா,

| | | |
|---|---|---|
| பொருள் | : | தமிழ்நாடு அமைச்சுப் பணி – 15.03.2025 நிலவரப்படி பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் பதவி உயர்வு – உரிமைவிடல் விண்ணப்பம் – சார்ந்து. |
| பார்வை | : | தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண். 026219/அ3/ இ1/2025 நாள். 02.06.2025 |

-----

தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ்வரும் பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் பணியிடங்களை நிரப்புவதற்காக பார்வையில் காணும் செயல்முறைகளின்படி தேர்ந்தோர் பெயர் பட்டியல் வெளியிடப்பட்டது.

இப்பட்டியலில் எனது வரிசை எண். …………ஆகும், இதன்படி இன்று (                    ) Google Meet வழியாக நடத்தப்பட்ட கலந்தாய்வில் எனக்கு வழங்கப்பட்ட பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் பதவி உயர்வினை என்னுடைய குடும்ப சூழ்நிலை/ உடல்நிலை காரணமாக தற்காலிக / நிரந்தர உரிமைவிடல் செய்கிறேன். இப்பதவி உயர்வு குறித்து மீளவும் மீள்உரிமை கோரமாட்டேன் எனவும் உறுதியளிக்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,